**செய்தி வெளியீடு எண் : 2146** **நாள் : 27.10.2023**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு.த.மனோதங்கராஜ் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இன்று (27.10.2023) நடைபெற்றது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் கீழ், முதல்வரின் முகவரி, மனுக்கள் மீது தீர்வு காணுதல், பட்டா மாறுதல், பட்டா மேல்முறையீடு, சாலை விபத்துக்களுக்கான நிவாரணம், இ–சேவை மையங்கள், மருத்துவம் –மக்கள் நல்வாழ்வுத்துறை பாலின விகிதம், நோய்வாய்ப்பட்ட புதிதாகப் பிறந்த குழந்தை சேர்க்கை, கதவுற்ற வளர் இளம் பெண்கள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம், தாய்மார்கள் இறப்பு, ஆர்பிஎஸ்கே –அங்கன்வாடி மற்றும் பள்ளிகள் பரிசோதனை, ஆர்.பி.எஸ்கே செயல்திறன், ஆர்.பி.எஸ்கே திட்டத்தின் கீழ் 7 முக்கிய அறுவை சிகிச்சைகளின் செயல்திறன், மக்களை தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம்–நம்மை காக்கும் –48, கல்வி கற்றல் திறன் –வருடாந்திர கல்வி நிலை அறிக்கை, நீண்ட நாட்களாக பள்ளிக்கு வராத மாணவர்கள், பள்ளி செல்லாக் குழந்தைகள் கணக்கெடுப்பு, 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், உயர்கல்வியில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை, ஆதிதிராவிடர் விடுதி மாணவர்கள் –10ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு, பிற்படுத்தப்பட்டோர் விடுதி மாணவர்கள் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு, பள்ளி உட்கட்டமைப்பு கீழ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளின் விபரம், உயர்கல்வி, வேலைவாய்ப்பு முகாம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், அங்கன்வாடி உட்கட்டமைப்பு, புதுமைப்பெண் –இரண்டாம் கட்டத் திட்டம், குழந்தை திருமணம்,

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திட்ட அனுமதி/ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, நகர்ப்புற பகுதிகளில் கேட்பு –வசூல் –நிலுவை, பேருந்து நிலையங்கள், நகராட்சி சாலைகள், பேரூராட்சி சாலைகள், மின் மயானம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்), 15–வது நிதிக்குழு பணி முன்னேற்றம், குடிநீர் விநியோகம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஊரக பகுதிகளில் கேட்பு –வசூல் –நிலுவை, சுய உதவிக் குழுக்களில் உள்ள இலக்கு மக்கள் குடும்பங்களின் விபரம், சுய உதவிக்குழுக்கள் கடன் இணைப்பு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் நுண்ணீர் பாசன செயல்பாடுகள், பயிர் சாகுபடி பரப்பு, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை, உழவர் சந்தைகளின் செயல்பாடுகள், இ–நாம், இ–வாடகை, கால்நடை, பால்வளம், ஆவின் கூட்டுறவு சங்கங்களின் செயல் திறன், ஆதிதிராவிடர் நலத்துறை (தாட்கோ), வன உரிமைச் சட்டம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை, பிரதம மந்திரி உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டம், நெடுஞ்சாலைகள், உள்துறை சாலைப்பாதுகாப்பு, போக்சோ வழக்குகள், வட்டார போக்குவரத்து அலுவலகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, இராதாபுரத்தில் விளையாட்டு அரங்கம் மற்றும் பயிற்சி மையம், அண்ணா ஸ்டேடியம் –வ.உ.சி பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், முத்திரைத் திட்டங்கள் – திருநெல்வேலி–செங்கோட்டை–கொல்லம் சாலை –நான்குவழிச் சாலையாக உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல், கூட்டு குடிநீர் திட்டங்கள், புறவழிச்சாலை பணிகள் ஆகிய துறைகளின் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்கள் கேட்டறிந்தார்கள்.

முன்னதாக, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் வருவாய்த்துறை சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

இக்கூட்டத்தில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சா.ஞானதிரவியம் அவர்கள், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.அப்துல் வகாப் அவர்கள், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் திரு.பி.எம்.சரவணன் அவர்கள், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் திரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் ஆணையர் திருமதி.மகேஸ்வரி, இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சிலம்பரசன், மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மா.சுகன்யா அவர்கள், திருமதி.ரேவதி அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.கே.ஆர்.ராஜு அவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் அவர்கள், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள், முன்னாள் அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in